கொசுக்கள் அதிகமாக உற்பத்தியாகிக்கொண்டு இருக்கிறது. மத்திய சர்க்காரானாலும், மாநில சர்க்காரானாலும் அடல்ட் மஸ்கொட்டோஸ் பறந்து வந்து கடிக்கின்ற காரணத்தால் கொசுக்களைக் கொல்வதற்கு வீரியமுள்ள மருந்துகளைக் கண்டு பிடிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் மத்திய சர்க்காருக்கு அல்லது மருத்துவ இலாக்காவிற்கு சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதிலே என்ன பிரச்னை என்றால் அடல்ட் மஸ்கொட்டோஸைப் பொறுத்தவரையில் தெர்மோ ப்ளாகிங் செய்து கொண்டிருக்கிறோம். அடல்ட் மஸ்கொட் டோஸை ஒழிக்க நாம் தெளிக்கக்கூடிய மருந்து படிப்படியாக அந்த மஸ்கொட்டோஸுக்கு ரெசிஸ்டென்ஸ் வருகிறது. மாண்பு மிகு உறுப்பினர் திரு. வி. வி. எஸ். கேட்ட கேள்வி, படிப்படியாக மஸ்கொட்டோஸுக்கு வருகின்ற காரணத்தால் நாம் தருகின்ற, percentage of examination அதை ஜாஸ்தியாகப் போட வேண்டியிருக்கிறது. அப்படிப் போடும் நேரத்தில், மஸ்கொட் டோஸை ஒழிக்கும் நேரத்தில் நமக்கும், நம்முடைய மனிதர்கள் மேலேயும் lethal action poisonous effect வரக்கூடிய நிலைமை யிருக்கிறது. ஆகவே, மனிதர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் poisonous effect, அதாவது lothal effect என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள், அது இல்லாமல், அதே நேரத்திலே மஸ்கொட் டோஸை ஒழிக்கக்கூடிய optimum percentage of the drug அதிலே போட்டுத்தான் தெளிக்க வேண்டியிருக்கிறது. அதை ஒருபுறத்திலே நாம் செய்துகொண்டிருக்கக்கூடிய நேரத்திலே நாம் முனைப்போடு கவனிக்க வேண்டியதை destruction of larvae — லார்வேயை வெகு சுலபமாக ஒழிக்க முடியும். அப்படிச் செய்தால் அதற்குப் பிறகு மஸ்கொட்டோஸ் வருவதற்கு இல்லா மல் போய்விடும். ஆகவே, லார்வேயை ஒழிக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். மஸ்கொட்டோஸை ஒழிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். ஆனால் இதில் இருக்கக்கூடிய சங் கடங்களை நான் சொல்லியிருக்கிறேன். அந்தச் சங்கடங்களை யெல்லாம் வைத்துக்கொண்டு எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

திருப்பத்தூர் அரசு மருத்துவ மனையில் ஓமியோபதி பிரிவு.

*வினா எண். 350—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் அரசாங்க மருத்துவ மனையில் புதியதாக ஓமியோபதி பிரிவு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

1981 மார்ச் 3]

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், இந்தக் கேள்விக்கு இடமில்லை என்று பதில் அளித்தார்கள். வடாற்காடு மாவட்டத்திலே திருப்பத்தூர் பெரிய நகரம். அங்குள்ள மருத்துவ மனையில் சித்த வைத்திய மருத்துவ மனை ஆரம்பிப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாகத்தான் நாம் இதை விஸ்தரித்துக் கொண்டு வருகின்றோம். ஆறு மாவட்டங்களில், தூத்துக்குடி, இராமநாதபுரம், வேலூர், கடலூர், நாகப்பட்டிணம், திருச்சிராப்பள்ளி—அதற்காக நாம் உத்தரவு போட்டிருக்கிறோம். திருப்பத்தூரைப் பொறுத்தவரையில் அதற்கான பரிந்துரையை டி. எம். எஸ். அனுப்பியிருக்கிறார். கிட்டத்தட்ட 22 இடங்களில் மீண்டும் இரண்டாவது கட்டமாகத் துவக்க வேண்டுமென்று அவர் பரிந்துரை அனுப்பியிருக்கிறார். அந்த 22 இடங்களில் ஒரு இடமாகத் திருப்பத்தூர் இருக்கிறது. அது டி. எம். எஸ். ஆபீசிலேயிருந்து வந்திருக்கிறது. அதை நம்முடைய நிதிநிலையைப் பொறுத்துப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை வருகின்ற பட்ஜெட்டிலே அறிவிப்போம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 6 புதிய மருத்துவத் தலைமையகங்களில் ஓமியோபதி மருத்துவப் பிரிவு ஆரம்பிக்க அரசாங்கம் ஆணையிட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆணை எப்பொழுது பிறப்பிக்கப்பட்டது ? அதன்மேலே இதுவரை எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் என்ன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, G.O. Ms. No. 1432, dated 2nd September 1980.